[1968 ஆகஸ்ட் 23

Post of Secretary to Government.

*101 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to re-designate the posts of 'Secretary to Government' as 'Secretary to a particular Ministry'?

THE HON. THIRU C. N. ANNADURAI : No, Sir.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்களுக்கு விரோதமாகக்கூட நடக்கக்கூடிய நிலைமை உருவாக முடிகிறது. இதை நீக்க "அரசாங்கச் செயலாளர்" என்ற நிலையை மாற்றி "அமைச்சகத்தின் செயலாளர்" என்று அமைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் கூறும் இடர்ப்பாடுகளைப் பற்றி இந்த அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை.

Provision of scooters to Sub-Inspectors

*102 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to provide Sub-Inspectors of Police in Tamilnad, with scooters ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், நம் மாநிலத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏராளமான கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 10 மைல்களுக்கு அப்பால் போலீஸ் காவல் நிலையம் இருப்பதால் தொடர்ந்து அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. குற்றம் நடந்தவுடன் அந்த இடத்தில் விரைந்து சென்று உடனடியாகக் கவனிப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஸ்கூட்டர்கள் கொடுக்க முடியா விட்டாலும் கூட சர்க்கார் நடத்தும் லாட்டரி சீட்டிலே 100 சீட்டுகளை இலவசமாகவோ, அல்லது கடனாகவோ கொடுத்து அவர்கள் யோகக்காரர்களாக இருந்தால் பரிசு விழுந்து அதன் மூலம் இந்த வாகனங்கள் வாங்கிக்கொள்ள இந்த அரசு உதவி செய்யுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரவர்கள் இந்த அதிர்ஷ்டச் சீட்டைக் கொடுத்து அதன் மூலம் லாபம் வரும்படியாகச் செய்து ஸ்கூட்டர்கள் வாங்கிக்கொள்ளச் செய்யலாமா என்று கூறி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டுவதற்காக அவர்கள் நன்றி தெரிவித்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இருக்கும் நிலை என்ன வென்றால், சர்க்கார் கோட்டாவிலே எவ்வளவு ஸ்கூட்டர்கள், லாம்பரட்டாக்கள் என்று குறியீட்டு எண் இருக்கிறது. அந்த அடிப்படையில் இன்னின்னாருக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதிலே சப்-இன்ஸ்பெக்டர்கள் விரும்பினால் கோட்டா எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும்.

திரு. கரு. ராம, கரியமாணிக்கம் அம்பலம் : சார், இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனில் மனுக் கொடுப்பவர்கள், போலீஸ் அதிகாரிகளை டாக்ஸி வைத்து கூட்டிக்கொண்டு வரக்கூடிய நிலை இருக்கிறது. அதைப் போக்க ஸ்கூட்டர் கொடுக்காவிட்டாலும் ஜீப் கொடுத்தாவது அவசரமாகக் கேஸ்களைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : பொதுவாகப் பல இலாகாக்களில் ஜீப்புகள் தவறுன முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்ற முறையில் புகார் வந்தவண்ணம் இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களின் யோசனைப்படி ஜீப்புகள் வழங்கப்பட்டால் இப்படிப்பட்ட புகார்கள் வர இடம் உண்டு. அந்தக் காரணத்தினுலேயே தர முடியாது என்று சொல்லவில்லை. ஜீப்புகள் விஷயத்திலும், ஸ்கூட்டர்கள் விஷயத்தில் இருப்பதுபோல இவ்வளவுதான் பெற முடியும், தர முடியும் என்ற கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

City compensatory allowance to officers

*1(3 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Indian Officers' Association in Madras has requested the Government to modify the rules for the grant of city compensatory allowance so as to bring them on a par with Central Government rules ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : ஆம்.

THIRU T. MARTIN ; May I request the Hon. Chief Minister to state what action the Government has so far taken on that representation ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Government is satisfied with the action already taken.

H.R.A. to Government Employees

*104 *Q.*—THIRU T. MARTIN :
THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to give house rent allowance to the State Government employees during this fianancial year, on a par with Central Government scale ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :

(அ) இல்லை, ஐயா.

(இ) இந்த வினு எழவில்லை.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state the extra benefits which will accrue to the State Government employees if the City Compensatory Allowance is determined on the scale allowed by the Central Government ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question is (*a*) whether there is any proposal to give house rent allowance to the State Government employees during this financial year on a par with